## 28.24 மாநில திட்டக் குழுவின் – இரண்டாவது அறிக்கை – நிலச் சீர்திருத்தம் பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

---

வருவாய் ( நிலச் சீர்திருத்தம் 2–2 ) துறை

அரசாணை (நிலை) எண்.1006 நாள் : 27.10.1997

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண். 75 ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள் 14.3.97.
2. அரசு ஆணை (நிலை) எண். 220 ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள் 4.7.97.
3. ஊரக வளர்ச்சித் துறை செயலாரின் நே.மு.க.எண். 12940 / ஊ1 / 97 / 1 நாள் – 18.03.97
4. நிலச் சீர்திருத்த இயக்குநரின் கடித எண் அ 3/6030/97 ( நி.சீ) நாள் 7.4.97.
5. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடித எண். கே 3/17828/97/ நாள் 7.5.97.

**ஆ ணை**

இந்திய அரசியலமைப்பின் 73–வது சீர்த்திருத்தச் சட்டத்திற்கு, இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்களுக்கு தேர்தல்கள் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பணியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுகள் 243 ஜி மற்றும் 1994 – ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 267–க்கு இணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல்–IV–உள்ள இனங்களைச் செயல்படுத்தவும் தேவையான பொறுப்புகளை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஆகவே எந்தெந்த பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து மாநிலத் திட்டக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே, மாநில திட்டக் குழு தனது இரண்டாவது அறிக்கையில் பிறவற்றோடு நிலச் சீர்திருத்தம் தொடர்பான இத்திட்டம் மீது அரசுக்கு அறிக்கையினை அனுப்பியுள்ளது.

2. மாநிலத் திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கையில் மேற்சொன்ன நிலச் சீர்திருத்தம் பற்றிய பரிந்துரைகளை அரசு முதன்மை ஆணையர் மற்றும் நிலச் சீர்த்திருத்த ஆணையர், மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையருடன் கலந்தாய்வு செய்தது. ஆய்வுக்கு பின்னர் , வருவாய்த் துறையின் திட்டப் பணிகளை செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முடிவு செய்தது. அதன்படி, இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

3. முதன்மை ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தமது நிர்வாகத்தின் கீழிருக்கும் ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள், அவைகளை ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டு உடனே அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. வழங்கப்பட்ட அறிவுரைகளின் நகல் ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**பி.எஸ்.பாண்டியன்**
அரசு செயலாளர்

## 28. DEVOLUTION OF POWERS

**பிற்சேர்க்கை**

திட்டங்களை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல் தொடர்பாக.

அதிசாரங்களை ஒப்படைத்தல் (நிலச் சீர்திருத்தம்)

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளைச் செயலாக்குதல் | உதவுதல் | மேற்பார்வையிடுதல் | மேற்பார்வையிடுதல் |
| 2 | பில ஆவணங்களை இப்போதைய நிலைத்துக் கொணர்தல் | உதவுதல் | மேற்பார்வையிடுதல் | மேற்பார்வையிடுதல் |
| 3 | பிற நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயலாக்குதல் | அதிகாரம் ஏதுமில்லை | மேற்பார்வையிடுதல் | மேற்பார்வையிடுதல் |

**பி.எஸ். பாண்டியன்**
அரசு செயலாளர்